DR. H. V. HANDE : It is a combined problem. Will the Government clarify why they have not declared this as a post-graduate qualification even though they do this training after graduation.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அதுபற்றிய விவரக் குறிப்பு இல்லை. மற்ற மாநிலங்களில் கொடுக்கப்படும் தகுதி இங்கே கொடுக்கப்படவில்லையென்றால், கொடுக்க வேண்டும் என்று அவர்களிடமிருந்து கோரிக்கை வந்தால் அதுபற்றி ஆலோசித்துத் தக்க முடிவு எடுக்கலாம்.

மல்லியத்திலுள்ள தனியார் உயர்நிலைப் பள்ளி

* 186 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் தாலுக்கா மல்லியத்தில் உள்ள தனியார் நடத்தும் உயர் நிலைப் பள்ளிக்கு 1969–70-ஆம் ஆண்டில் அரசு வழங்கிய மான்யத் தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : மல்லியத்தில் மானியம் பெறும் உயர்நிலைப் பள்ளி இல்லை. ஆனால் அங்கு மானியம் பெறும் உயர் தொடக்கப்பள்ளி ஒன்று உள்ளது. அதற்கு 1969–70-ஆம் ஆண்டில் கிடைத்த மான்யம் ரூ. 11,742.

திரு. கொளத்தூர் கோதண்டம் : தலைவர் அவர்களே, சம்பந்தப்பட்ட பள்ளியினுடைய நிர்வாகம் சரியான முறையிலே நடைபெறவில்லை என்ற புகார் அரசுக்கு வந்திருக்கிறதா? அப்படியானால் அதன்பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அதைப்பற்றிய குறிப்பு இல்லை. தனிக் கேள்வி போடவும்.

திருமயம் அரசு உயர்நிலைப்பள்ளிக்கு விளையாடுமிடம்

* 187 வினா—புலவர் பொ. பொன்னம்பலம : மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருமயம் அரசினர் உயர்நிலைப்பள்ளி மாணாக்கர்கள் தங்கட்கு விளையாட்டிடம் தேவை என்பது குறித்து 1969 டிசம்பர் திங்களில் அரசுக்கு ஏதேனும் வேண்டுகோள் மனு அனுப்பியுள்ளனரா?

(இ) ஆமெனில், அதன் விவரமென்ன?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) பள்ளிக்கு அருகாமையிலுள்ள அரசாங்க புறம்போக்கு நிலத்தை, விளையாட்டிடத்திற்காக ஒப்படைக்க வேண்டுமென்று மாணவர்கள் விரும்பினர்கள். பள்ளிக் கல்வி இயக்குநர் தக்க நடவடிக்கை எடுத்து வருகிறார்.